# மடீட்சியாவின் ஆயுஷ் 2019
# பாரம்பரிய மருத்துவ கண்காட்சி

<u>அறிக்கை</u>

மடீட்சியா, மத்திய ஆயுஷ் அமைச்சகம், மத்திய சிறு, குறு, நடுத்தர தொழில்கள் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் வணிகத்துறை, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி ஆதரவுடன் ஆயுஷ் 2019 என்ற பாரம்பரிய மருத்துவ முறைகளான சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா, இயற்கை மருத்துவம் மற்றும் ஹோமியோபதி பற்றிய தொழில் கண்காட்சி 15.8.2019 முதல் 18.8.2019 வரை மடீட்சியா அரங்கில் நடைபெற்றது.

கண்காட்சியில் 60-க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. தமிழகம், கேரளா மாநிலங்களில் சித்தா, ஆயுர்வேத மருந்து உற்பத்தியாளர்களில் முன்னனி நிறுவனமாக விளங்கும் இம்காப்ஸ், கோட்டக்கல் ஆரிய வைத்தியசாலா, தன்வந்திரி ஆயுர்வேத வைத்தியசாலை, கோகிலா சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம், மதுரை, ஈரோடு எஸ்.கே.எம். சித்தா, ஆயுர்வேத நிறுவனங்களும், இயந்திர தளவாட உற்பத்தியாளர்கள், மூலப்பொருள் விற்பனையாளர்கள் கலந்து கொண்டு தங்களது பொருட்களை டிஸ்பிளே செய்திருந்தனர். மத்திய அரசின் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், தேசிய சித்த மருத்துவ நிறுவனம், மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி குழுமம் (CCRS), தமிழ்நாடு அரசின் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்குனரகம், மாநில உரிமம் வழங்கும் ஆணையம் ஆகிய துறை சார்ந்த நிறுவனங்களுக்கும் இலவச அரங்குகள் வழங்கப்பட்டது. இந்த அரங்குகளில் இந்திய பாரம்பரிய மருந்து நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அரசின் சேவைகள் குறித்த விளக்கத்தினையும், பொதுமக்களுக்கு இலவச மருத்துவ சேவைகளையும் வழங்கினர்.

கண்காட்சியின் துவக்கவிழா 15.8.2019 அன்று நடைபெற்றது. இந்திய அரசின் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தின் முன்னாள் இயக்குனர் **டாக்டர் வி. பானுமதி** அவர்கள் கண்காட்சியினை தொடங்கி வைத்து தொடக்கவுரையாற்றினார். புதுடெல்லி இந்திய மருத்துவ மத்திய கவுன்சில் உதவித் தலைவர் **டாக்டர் வி.பி. விஜயக்குமார்** அவர்கள் கண்காட்சி வழிகாட்டி மலரை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். ஆயுஷ் கண்காட்சி நிறுவனத் தலைவர் டாக்டர் வி காளிதாஸ் அவர்கள் கண்காட்சி நோக்கம் குறித்து பேசினார். நிகழ்ச்சிக்கு மடீட்சியா தலைவர் திரு கே.பி. முருகன் அவர்கள் தலைமை வகித்தார். கண்காட்சி உதவித் தலைவர் டாக்டர் ஜெ ஜெயவெங்கடேஷ் அவர்கள் கண்காட்சியில் நடைபெறவிருக்கும் கருத்தரங்குகள் குறித்து விளக்கினார். கண்காட்சித் தலைவர் திரு கே. இராஜமுருகன் அவர்கள் சிறப்பு விருந்தினர்களை கௌரவித்து நினைவு பரிசு வழங்கினார். கௌரவ செயலாளர் திரு பா முருகானந்தம் அவர்கள் நன்றி நவின்றார்.

**அரியவகை மூலிகை செடி கண்காட்சி:**

இந்த ஆண்டு பிரத்யேகமாக அமைக்கப்பட்ட தனி அரங்கில் 200-க்கும் மேற்பட்ட அரிய வகை மூலிகை செடிகள் கண்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது. புற்று நோய்க்கான மருந்தாக சொர்க்க மரம், சிறுநீரக கற்களை கரைக்க கூடிய - பூனை மீசை, வீக்கம், வாதம் நோய்களை கட்டுபடுத்தும் கொடிவேல் செடிகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

**கருத்தரங்குகள்:**

கண்காட்சி நடைபெற்ற 4 நாட்களிலும் சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் ஹோமியோபதி சிகிச்சை முறையின் அவசியம், நோய் தீர்க்கும் வழிமுறைகள் குறித்து கீழ்கண்ட தலைப்புகளில் கருத்தரங்கம் நடைபெற்றது.

- பாரம்பரிய ஆரோக்கிய வாழ்க்கைக்கு செய்யக்கூடிய மற்றும் செய்யக்கூடாத செயல்கள்
- ஆயுள் நீட்டிக்கும் சித்தா காயகற்பம்
- குறிப்பிட்ட நோய்களுக்கு அட்டைப்பூச்சி சிகிச்கை முறை செயல்முறை விளக்கம்
- ஆண், பெண் மகப்பேறு தற்போதைய நிலை
- சித்த மருத்துவம் மூலம் சிறுநீரகம் காப்போம்.
- சிறுநீரக கற்கள் தடுப்பு மற்றும் குணமாக்கும் முறைகள்
- புற்று நோய்க்கு ஒருங்கிணைந்த சிகிச்சை முறைகள்
- ஹோமியோபதி மருத்துவம் - சிறப்பம்சங்கள்
- சர்க்கரை நோயை எளிமையாக்கி சிறப்பாக வாழும் வழிமுறைகள்
- பொது சுகாதாரத்தில் யோகா இயற்கை மருத்துவத்தில் பங்கு
- ஆயுஷ் மருத்து நிறுவனங்கள் வளர்ச்சி மற்றும் உரிமம் பெறும் வழிமுறைகள்
- நிலவேம்பு குடிநீர் – ஒரு ஆய்வறிக்கை
- வலி நிவாரணம் தரும் வர்ம சிகிச்சை முறைகள்
- மேக நோய்கள், எய்ட்ஸ்-க்கு தேவ சூரணம் -சித்தா மருத்துவம்
- ஆயுஷ் கிளஸ்டர் பற்றிய விரிவாக்கம்
- தவறான உணவுப் பழக்கம் மற்றும் வாழ்க்கை முறையினால் ஏற்படும் நோய்களுக்கு ஆயுர்வேத சிகிச்சை
- சித்தர்கள் வழி ஆரோக்கியம் தரும் நோய் தடுப்பு மருத்துவம்
- பாரம்பரிய மருத்துவர்களின் புத்தாக்க பயிற்சி
- புற்று நோய் தடுப்பு மற்றும் மேலாண்மை
- மூலிகை சாகுபடி மற்றும் சந்தை படுத்தல் வாய்ப்புகள்
- மூலம் பௌத்தரம் நோய்களுக்கு அறுவை சிகிச்சை இல்லா காரநூல்-காரரூத்ரா சிகிச்சை
- ஆரோக்கியம் மற்றும் மனநிம்மதிக்கு தினந்தோறும் யோகா
- மூலிகை மாயஜால காட்சிகள்

கருத்தரங்கில் நல்ல அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

**போட்டிகள்:1**

18.8.19 சனிக்கிழமையன்று **பாரம்பரிய உணவு சமையல் போட்டி** நடத்தப்பட்டது. இந்த போட்டியில் பெண்கள் கலந்து கொண்டு பாராம்பரிய உணவான இனிப்பு, காரம் வகைகளை வீட்டிலேயே தயாரித்து கொண்டு வந்து டிஸ்பிளே செய்திருந்தனர். போட்டி நடுவர்கள் குழு உணவு வகைகளை மதிப்பீடு செய்து வெற்றியாளர்களை தேர்வு செய்தனர். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

**இலவச மருத்துவ முகாம்:**

கண்காட்சி நடைபெற்ற 4 நாட்களும் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு நாளும் சித்தா, ஆயர்வேதா, யுனானி, ஹோமியோபதி சம்பந்தமான மருத்துவர்கள் கலந்து கொண்டு இலவச ஆலோசனைகளை வழங்கினார்கள். **தினசரி காலை 11.00 மணி முதல் 1.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரையிலும் முகாம் நடைபெற்றது.** இம்முகாமில் ஆண்/பெண் 60 வயது முதல் 5 வயது குழந்தைகள் வரை சுமார் 3000 பேர் கலந்து கொண்டு தங்களுக்குரிய நோய்கள் குறித்து மருத்துவரிடம் தெரிவித்து இலவச ஆலோசனைகள் பெற்றுள்ளனர். மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியதுடன் அவர்களுக்கு தேவையான மருந்து, மாத்திரைகள் இலவசமாகவும் வழங்கப்பட்டது. குறிப்பாக மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி குழுமம் அரங்கில் மட்டும் 100க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு ஒரு மாதத்திற்கான மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கினார்கள்.

18.8.2019 அன்று கண்காட்சி நிறைவு விழா நடைபெற்றது. மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் பொது இயக்குனர் **டாக்டர் கே. கனகவள்ளி**. அவர்கள் உரையாற்றினார். இந்திய மருத்துவம், மாநில உரிமம் வழங்கும் அலுவலர் **டாக்டர் எம். பிச்சையகுமார்** அவர்கள் சிறப்புரையாற்றினார். சென்னை இம்ப்காப்ஸ் நிறுவன தலைவர் **டாக்டர் ஆர். கண்ணன்** மற்றும் மதுரை அரசு ஹோமியோபதி மருத்துவ கல்லூரி முதல்வர் **டாக்டர் என். கார்த்தியேன்** ஆகியோர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். ஆயுஷ் கண்காட்சித் தலைவர் டாக்டர் வி காளிதாஸ் அவர்கள் கண்காட்சி குறித்த அறிக்கையை சமர்ப்பித்தார்.. நிகழ்ச்சிக்கு மடீட்சியா தலைவர் திரு கே.பி. முருகன் அவர்கள் தலைமை வகித்தார். கண்காட்சி துணைத் தலைவர் டாகடர் ஜெ ஜெயவெங்கடேஷ் அவர்கள் கண்காட்சியில் கலந்து கொண்ட அரசு நிறுவனங்களை பாராட்டி நினைவு பரிசினை வழங்கினார். கௌரவ செயலாளர் திரு பா முருகானந்தம் அவர்கள் நன்றி நவின்றார்.

4 நாட்கள் நடைபெற்ற கண்காட்சியில் ரூ.3 கோடிக்கு மேல் வர்த்தகம் நடைபெற்றுள்ளது. அதே போல் இயந்திர உற்பத்தியாளர்களுக்கு நல்லதொரு விசாரணை கிடைக்கப்பெற்றுள்ளது. 4 நாட்களில் கண்காட்சியை 15000 முதல் 20000 பேர் வரை கண்டுகளித்துள்ளனர். குறிப்பாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும், அண்டை மாநிலமான கேரளாவிலிருந்தும் தொழில்முனைவோர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆயுஷ் கண்காட்சியை கண்காட்சி நிறுவனத் தலைவர் டாக்டர் V. காளிதாஸ் அவர்கள் தலைமையில் திரு கே. இராஜமுருகன் அவர்கள் தலைவராகவும், டாக்டர் J. ஜெயவெங்கடேஷ் அவர்கள் துணைத் தலைவராகவும், 10-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கொண்ட குழுவினர் சிறப்பாக பணியாற்றி இந்திய பாரம்பரிய மருத்துவ துறைக்கும், மடீட்சியாவிற்கும் பெருமை சேர்த்துள்ளது பாராட்டுக்குரியதாகும்.

V. Kalidass

வி காளிதாஸ்
கண்காட்சி நிறுவனத் தலைவர்.